# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

## சட்டமாணி (மீள்) பரீட்சை, ஆண்டு 1 – 2018

## சட்ட வழிமுறை

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 07

ஏதேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.

(தெளிவற்ற கையெழுத்திற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

1. "சட்டமென்பது அடிப்படையாக அமைந்த உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாப்பதற்கு வடிவமைக்கப்பட்ட சமூகத்திற்கான விதிகளின் தொகுதியொன்றாகும். எவ்வாறாயினும், சட்டமானது அறவொழுக்கத்திற்கு அமைவானதாக இருத்தல் வேண்டும்."

   சட்டமானது அறவொழுக்கத்திற்கு அமைவானதாக இருத்தல் வேண்டுமென நீர் கருதுகின்றீரா? சட்டத்தின் ஏதேனும் பரப்பிலிருந்து உதாரணங்களைக் காட்டி, காரணங்களைத் தருக. பொருத்தமான சட்டச் சிந்தனைப் பிரிவுகளுடன் தொடர்புறுத்துமாறு நீர் எதிர்பார்க்கப்படுகின்றீர்.

2. நீதிபதியின் விகிபங்குடன் விசேடமாகத் தொடர்புறுத்தி எதிரிடை முறைமையினதும் (adversarial system) உசாவு முறைமையினதும் (inquisitorial system) முக்கிய அம்சங்களை ஆராய்க.

3. நியதிச் சட்டப் பொருள்கோடலின் ஏதேனும் இரண்டு விதிகளை ஒப்பிட்டு வேறுபடுத்துக. தீர்ப்புச் சட்டங்களிலிருந்து உதாரணங்களை ஆதாரம் காட்டி உமது விடையை விளக்குமாறு நீர் எதிர்பார்க்கப்படுகின்றீர்.

4. X,Y மற்றும் Z ஆகிய நிகழ்வுகள் மீதமைந்த வழக்கொன்று இலங்கையில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இரண்டு நீதிபதிகளைக் கொண்ட அமர்வொன்றின் முன்னர் வாதிடப்பட்டுக் கொண்டிருக்கின்றது. உமது விடையை ஆதாரப்படுத்துவதற்கு பொருத்தமான ஆதாரங்களை ஆதாரங்காட்டி பின்வரும் தீர்ப்புகளின் ஏற்புடைமையாந்தன்மையை ஆராய்க:

(அ) X.Y மற்றும் Z ஆகிய நிகழ்வுகள் மீதமைந்த வழக்கொன்றில் 2017 இல் இலங்கை உயர் நீதிமன்றத்தின் நிறைகுழாமினால் வழங்கப்பட்ட தீர்ப்பொன்று:

(ஆ) X.Y மற்றும் Z ஆகிய நிகழ்வுகள் மீதமைந்த வழக்கொன்றில் இலங்கையிலிருந்து செய்யப்பட்ட மேன்முறையீட்டில் கோமறைக் கழகத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பொன்று:

(இ) X.Y மற்றும் Z ஆகிய நிகழ்வுகள் மீதமைந்த வழக்கொன்றில் இந்திய உயர்நீதிமன்றத்தால் 2015 டிசெம்பரில் வழங்கப்பட்ட தீர்ப்பொன்று:

(ஈ) X.Y மற்றும் Z ஆகிய நிகழ்வுகள் மீதமைந்த வழக்கொன்றில் இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இரண்டு நீதிபதிகளைக் கொண்ட அமர்வொன்றினால் 2018 இல் வழங்கப்பட்ட தீர்ப்பொன்று.

5. சட்டத் தோற்றுவாயொன்றாக "வழக்காறின்" முக்கியத்துவத்தையும், வழக்காறொன்றின் வலிதாந்தன்மையைத் தீர்மானிப்பதற்கு இலங்கை நீதிமன்றங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள பரீட்சைகளையும் ஆராய்க. உமது விடையைப் பொருத்தமான சட்ட ஏற்பாடுகளாலும் தீர்ப்புச் சட்டத்தாலும் ஆதாரப்படுத்துக.

6. இலங்கை நீதி நிருவாக முறைமையில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள பிணக்கிற்கான மாற்றுத் தீர்வு பொறிமுறைகளை, அவைகளின் பலங்கள் மற்றும் பலவீனங்களிற்கு முக்கியத்துவம் வழங்கி ஆராய்க. அவைகளின் வினைத்திறனை அதிகரிப்பதற்கான விதந்துரைகளையும் தருக.

7. சிரேஷ்ட வழக்கறிஞரொருவரால் இலங்கையில் இளம் வழக்கறிஞர்கள் மத்தியில் விநியோகிக்கப்படுவதற்கென "இலங்கையில் வழக்கறிஞர்களுக்கான அறநெறிகள்" என்பது பற்றிய சுருக்கமான பத்திரமொன்றைத் தயாரிக்கும் பணி வழங்கப்பட்டுள்ளதெனக் கருதி, சமகால இலங்கையில் இளம் வழக்கறிஞர்களுக்கு மிக முக்கியமானதென நீர் கருதும் உயர் தொழில்சார் அறநெறிக் கோட்பாடுகளின் ஆகக் குறைந்தது ஏழு (07) முக்கிய விடயங்கள் மீது கவனஞ் செலுத்தி சுருக்கமான பத்திரமொன்றை எழுதுக.

*****